முதன்மை வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றம், திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**R.L.TO.P.No. 3 /2023**

11.03.2026 எமா.சா.2 திரு. தமீம் அன்சாரி

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிர்மனுதாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எதிர்மனுதாரரின் மகள் வழி பேரன். எதிர்மனுதாரர் எந்த ஆண்டு தபசில் வீட்டிற்கு குடி வந்தார் என்றால் 1983ம் ஆண்டு வந்துள்ளார் என்று கேள்விபட்டேன். நான் எப்போது பிறந்தேன் என்றால் 1997ம் ஆண்டு. வாடகையை எத்தனை மாதமாக நான் அனுப்பினேன் என்றால் 2021 ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து. 2019ம் ஆண்டில் இருந்து மார்ச் 2026 வரை வாடகை செலுத்தி வந்ததற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக முன் வந்து 2021 ம் ஆண்டு நவம்பர் வரை நேரடியாக தான் வாடகையை எதிர்மனுதாரர் செலுத்தியுள்ளார். 2021 முதல் உள்ள காலத்திற்கு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.
2. மனுதாரருக்கு 2021 ஆண்டு வரை வாடகை செலுத்தி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது ஆனால் கேள்விபட்டுள்ளேன். எதிர்மனுதாரர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கணவர் தான் மனு தபசில் சொத்தில் ஆரம்பத்தில் வாடகைக்கு குடிவந்தார் என்றால் அவ்வாறு தான் கேள்வி பட்டேன்.
3. நான் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Decree uploaded on 11.03.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.11 17:45:30 +0530

Principal District Munsif,
Tirunelveli.